## விருதுநகர் அன்னை சத்யா குழந்தைகள் காப்பகத்தில் முதல்வர்!

# குழந்தைகள் “அப்பா” என்றழைத்த நெகிழ்ச்சி மிகு - உணர்வுப்பூர்வ சம்பவம்!

### “அப்பா… நிறைவான நாள்” - முதல்வர் - சமூக வலைதளப் பக்கத்தில் பெருமிதப் பதிவு!







**வி**ருதுநகர் மாவட்ட கள ஆய்விற்காக வந்திருந்த முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் விருதுநகர் சூலக்கரை பகுதியில் அமைந்துள்ள அன்னை சத்யா பகுதியில் அரசு குழந்தைகள் காப்பகத்தில் உள்ள குழந்தைகளை சந்தித்து பேச திட்டமிட்டிருந்தார். இதற்காக தனது வேனில் கிளம்பியவர், சூலக்கரை மேட்டில் உள்ள ஒரு பேக்கரியை பார்த்ததும், வண்டியை நிறுத்து மாறு கூறினார். பின்னர் முதல்வர் வேனைவிட்டு இறங்கி, நேராக பேக்கரிக்குள் சென்றார். அங்கிருந்து கேக்குகள், பிஸ்கட்களை பணம் கொடுத்து வாங்கினார். தொடர்ந்து அருகில் உள்ள கடையில் பழங்களையும் வாங்கினார்.

இதைப் பார்த்த அமைச்சர்கள் உள்ளிட்டோர் ஏன் இவ்வளவு கேக்குகளையும், பழங்களையும் வாங்குகிறார் என்பதை அறியாமல் திகைத்தபடி நின்றனர். தொடர்ந்து அன்னை சத்யா குழந்தைகள் காப்பகத்திற்குச் சென்ற முதல்வரை, இன்முகத்துடன் மாணவிகள் வரவேற்றனர். மாணவிகள் ஒவ்வொருவருக்கும் தான் வாங்கி வந்த கேக், பிஸ்கட் மற்றும் பழங்களை முதல்வர் வழங்கினார். இதைப் பார்த்ததும் அந்த மாணவிகள் அன்பின் பாசத்தில் நெகிழ்ந்தனர்.

கிராமத்தில் இருந்து தங்கள் பிள்ளைகளை பார்க்க வரும் தந்தை, எப்படி வெறும் கையோடு வருவார்? தனது பிள்ளைகளுக்கு என்னென்ன பொருள் பிடிக்கும் என்பதை அறிந்து, அவர் விரும்பிய பொருளை வாங்கி வந்து கொடுப்பார். அதைப்போல ஒரு தந்தையாய் முதல்வர் கேக், பிஸ்கட் மற்றும் பழங்களை வாங்கி வந்த அன்பை பார்த்து மகிழ்ந்த மாணவிகள் அன்பின் உச்சத்திற்குச் சென்று, முதல்வரை பார்த்து, ‘உங்களை அப்பா என அழைக்கலாமா…’ என்றனர். தொடர்ந்து, “உங்களது குழந்தையைப் போல நினைத்து ஸ்வீட் வாங்கி வந்ததை வார்த்தையால் சொல்ல முடியாது. எங்க பெற்றோரைப் போல நீங்க… அப்பா என்றதும் ஸ்மைல் வருகிறது” என தனது உணர்ச்சிகளால் முதல்வரை மட்டுமின்றி, சுற்றியிருந்த அனைவரையும் உருகச் செய்தனர்.

தொடர்ந்து முதல்வர், “வரட்டுமா…. எல்லாருக்கும் போயிட்டு வர்றேன்…. இந்த பக்கம் வர்றபோதெல்லாம் வர்றேன்” என முதல்வர் நெகிழ்ச்சியுடன் கூறியதைக் கேட்டதும், பாசப்பிணைப்பில் சிக்கிய மாணவிகள், ‘பை அப்பா…. பை..”. எனக் கூறி முதல்வர் வேனில் ஏறிச் செல்லும் வரை காப்பக வாசல் வந்து டாடா கட்டி அன்பால் அங்கிருந்தவர்களை கட்டிப்போட்டனர். முதல்வர் காப்பகத்திற்குச் சென்றது முதல், திரும்பிச் சென்றது வரை நீண்ட காலமாக பிரிந்திருந்த தந்தையை மகள்கள் பார்த்ததைப் போலவும், பிள்ளைகளை பிரிந்திருந்த தந்தை பார்த்ததும் எப்படி உணர்ச்சி ததும்ப மகிழ்ந்திருப்பார்களோ…..அதைப் போன்றதொரு மகிழ்ச்சியான குடும்பத்தை காப்பகம் சந்தித்திருக்கிறது.

இதுதொடர்பான வீடியோ காட்சிகளை முதல்வர் மு.க.ஸ்டாலின் தனது எக்ஸ் தள பக்கத்தில் பகிர்ந்து வெளியிட்டுள்ள பதிவில், **‘அப்பா… நிறைவான நாள்’** என குறிப்பிட்டு மகிழ்ந்துள்ளார்.

